2017 ஜூலை 12]

கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

187—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***3365—திரு. அ. ராமு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோத்தகிரி வட்ட மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, நவீன வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோத்தகிரி அரசு வட்ட மருத்துவமனையைத் தரம் உயர்த்தி நவீன வசதிகள் வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோருகிறார். அந்த மருத்துவமனை ஏற்கெனவே வட்டத் தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆகையினால், வட்ட மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்துகின்ற கொள்கை முடிவு ஏதும் அரசிடம் இல்லை. அந்த மருத்துவமனைக்கு வேண்டிய வசதிகள் படிப்படியாகச் செய்து கொடுக்கப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமு அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'விதைத்துக்கொண்டேயிரு, முளைத்தால் மரம், இல்லையேல் உரம்' என மக்கள் பணியாற்றி தன்னலம் பார்க்காமல், தன்னலம் மறந்து இன்று தெய்வமாக நம்மை வழிநடத்திடும் மாண்புமிகு தெய்வத்திரு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை. வரலாற்றில் இடம்பிடித்த யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை' என்று வாழ்ந்து காட்டிய தெய்வமான மாண்புமிகு தெய்வத்திரு அம்மா அவர்களுடைய பாதையில் தமிழகத்தை, இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக மாற்றிட அல்லும்பகலும் அயராது உழைத்து, அனைவரையும் அரவணைத்து, 'எந்தச் செயலையும் கவனமாகச் செய், எதுவாக இருந்தாலும் தெள்ளத்தெளிவாகச் செய்' என்ற முதுமொழிக்கேற்ப மாண்புமிகு தெய்வத்திரு அம்மா அவர்களுடைய ஆட்சியை நல்வழியில் நடத்திடும் கொங்கு மண்டலத்தின் வாரிசு, புன்னகையாலே புத்துணர்ச்சி தந்து மக்கள் மனதில் மையம் கொண்டுள்ள மாங்கனியின் சுவைகொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேண்டுதல் நிறைவேறினால் கடவுளுக்கு 108 தேங்காய் உடைப்போமென வேண்டுவோம். அத்தகைய வேண்டுதல் நிறைவேறியதுபோல, மானியக் கோரிக்கையில் 108 மக்கள் நலத் திட்டங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போன்ற அறிவிப்புகளை சுமார் 1 இலட்சம் மக்கள் தொகைகொண்ட கோத்தகிரி பகுதிக்கும் அறிவிக்க வேண்டும். ஏனெனில், . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, கேள்வியை முடியுங்கள்.

திரு. அ. ராமு: கோத்தகிரி பகுதி சுமார் 100–க்கும் மேற்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகளையும், கிராமங்களையும் உள்ளடக்கியதாகவும், தேயிலை விவசாயிகளும், தேயிலைத் தோட்டத் தொழிலை நம்பியுள்ள ஏழைத் தொழிலாளர்களும் வசிக்கும் பகுதியாகவும் உள்ளது.

2017 ஜூலை 12]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, சுருக்கமாகக் கேள்வியைக் கேட்டு முடியுங்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வியைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

முற்பகல் 10–50

திரு. அ. ராமு: இங்குள்ள அரசு மருத்துவமனைக்கு மிகப் பெரிய அளவிலான அறுவை சிகிச்சை செய்யும் M.D., M.S. போன்ற உயர் படிப்பு படித்த மருத்துவர் பணியிடங்களும், அவர்களுக்கு உதவிபுரிய Anesthetist எனப்படும் மயக்கவியல் மருத்துவர் பணியிடமும் ஏற்படுத்தி, உயர்தரமான மருத்துவ சிகிச்சை அளித்திட Digital X–ray பிரிவையும் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய கோத்தகிரி பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதன் காரணமாக, அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு, உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. எனவே, இம்மருத்துவமனையில் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். 86 படுக்கைகள் கொண்ட இம்மருத்துவமனையில் தற்போது, 76 படுக்கை வசதிகள் மட்டுமே உள்ளன. இம்மருத்துவமனைக்கு புதிய கூடுதல் கட்டடங்களைக் கட்டித் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி மருத்துவமனைக்குப் போதுமான வசதிகள் செய்துதர வேண்டுமென்று மாண்புமிகு குன்னூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள் நேரிலேயும் தொடர்ந்து வலியுறுத்தியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீலகிரி மாவட்ட மக்கள்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்த காரணத்தால்தான், அந்த மலைப் பகுதி மக்களுடைய மருத்துவத் தேவையை மனதிலே வைத்துக்கொண்டு, ஒரே நாளில் ஊட்டி மருத்துவமனைக்கு ஒரு M.R.I. Scan–ம், தாங்கள் சார்ந்திருக்கக்கூடிய கோத்தகிரி மருத்துவமனைக்கு ஒரு C.T. Scan–ம் மற்றும் கூடலூர் மருத்துவமனைக்கு ஒரு C.T. Scan–ம் வழங்கி, அந்த மாவட்ட மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். அந்த 3 C.T. Scan இயந்திரங்களும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நானும் ஆய்வு செய்திருக்கின்றேன். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான Digital X–ray கருவியும் வழங்கப்படும் என்ற அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் anesthetist என்னும் மயக்கவியல் மருத்துவர் பணியிடங்கள் 9 காலியாக இருக்கின்றன. ஆனால், அம்மாவட்டத்தில் ஒரேயொரு anesthetist மட்டுமே இருக்கிறார். ஆகவே, குன்னூருக்கும், கோத்தகிரிக்கும் தனித்தனியாக anesthetist பணியிடங்களை உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்றைய தினம், வணிக வரித் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதம் நடைபெற இருப்பதால், ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழில் பிரதான தொழிலாக இருக்கின்றது. Sellers–தான் இதுவரை Buyer–க்கு நேரடியாக bill போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், புரோக்கரே bill போட வேண்டுமென்று தற்போது தெரிவித்திருக்கிறார்கள். G.S.T.–ல் Sellers–தான் நேரடியாக Buyer–க்கு bill போட வேண்டுமென்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2017 ஜூலை 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது* anesthetist post–*மயக்க மருந்து நிபுணர்கள் என்று நான் கருதுகிறேன். மருத்துவர் பணியிடங்கள் வேகமாக நிரப்பப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, மருத்துவர் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாளை 600 செவிலியர்களுக்கான பணி நியமன ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வழங்கவிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மலைப் பகுதியில், மயக்கவியல் மருந்து நிபுணர்கள்,* Obstetricians & Gynaecologists *போன்ற பணியிடங்களில் மருத்துவர்களை நியமிப்பது எங்களுக்குக் கொஞ்சம் சவாலாக இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு மிகுந்த கனிவோடு பரிசீலனை செய்து, விரைவிலே அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதைவிட்டு மறையாத எங்கள் குடும்பத்தின் குல விளக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். வானத்தில் எத்தனை நட்சத்திரங்கள் இருந்தாலும், நமக்கு வெளிச்சம் தந்து வழிகாட்டுவது நிலவு மட்டும்தான். அதுபோல, எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்லும் எங்கள் பாசமிகு அண்ணன், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

வீரபாண்டி தொகுதியிலுள்ள மாரமங்கலத்துப்பட்டி என்ற இடத்திற்கு அருகிலே உள்ள 10–க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மருத்துவமனை வசதி இல்லாமல், அப்பகுதியில் உள்ள சுமார் 20

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். அதனால், மாரமங்கலத்துப்பட்டி பகுதியில் அரசு மருத்துவமனை ஒன்றினை அமைத்துக் கொடுத்து, அப்பகுதி மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதிக்கு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான கருத்துரு, துறை வாரியாக உரிய ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது 10–க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மருத்துவ வசதி இல்லையென்று சொன்னார்கள். அதுமாதிரியான நிலைமையே இல்லை. ஒன்று, ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கும். அதற்கடுத்து, 416 நடமாடும் மருத்துவக் குழுக்கள் இருக்கின்றன. எங்கெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் இல்லையோ, அங்கெல்லாம் ஒரு மாதத்திற்கு 40 visit என்ற அடிப்படையிலே, நடமாடும் மருத்துவக் குழுக்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மூலைமுடுக்கு, குக்கிராமங்கள் என அத்தனை கிராமங்களிலும் மிகச் சிறப்பாக மருத்துவ சேவையாற்றி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் மருத்துவ வசதியை ஏற்படுத்துவதற்கும் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா*

2017 ஜூலை 12]

மருத்துவமனைகளிலும் மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்ற தவறான செய்தியைச் சொல்கிறார்கள். தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனைகளில் 5 டாக்டர்கள் இருக்க வேண்டும். 5 டாக்டர்கள் இருக்கவேண்டிய இடத்தில் ஒரு டாக்டர்தான் இருக்கிறார். கேட்டால், P.G. படிக்கப் போயிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். P.G. படிக்கப் போயிருக்கிறார்களா, இல்லையா என்பது தெரியவில்லை. ஆக, மருத்துவர் பணியிடங்கள் அதிகமாக காலியாக இருக்கின்றன. கிராமங்களில் டெங்கு காய்ச்சல் அதிகமாகப் பரவுவதாக இன்றைய தினம் செய்தித்தாளில் வந்திருக்கின்றது. 13 மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் அதிகமாகப் பரவி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லப்போனால், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் சொந்த ஊருக்குப் பக்கத்து ஊரில் உள்ள முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் அவர்கள் நேற்றைய தினம் டெங்கு காய்ச்சலால் இறந்திருக்கிறார்கள். இதெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஏனென்றால் மக்கள் பீதியில் இருக்கிறார்கள். போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற பீதி இருக்கிறது. டெங்கு காய்ச்சல், மர்ம காய்ச்சல் என்று சொல்கிறார்கள். போதிய மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் காய்ச்சல் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் இல்லை என்ற காரணத்தினால் காய்ச்சல் வராது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், மருத்துவர் பணியிடங்கள், செவிலியர் பணியிடங்கள் தொடர்ந்து படிப்படியாக நிரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.*

கடந்த வாரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரடியாக வந்து, 500 மருத்துவர்களுக்குப் பணி ஆணை வழங்கினார்கள். நாளை 600 செவிலியர்களுக்குப் பணி ஆணை வழங்கவிருக்கிறார்கள். சொல்லிக்கொண்டிருக்காமல், தொடர்ந்து செயலாற்றிக்

கொண்டிருக்கின்ற அரசு என்பதை நிரூபிக்கின்ற வகையில்தான், அதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பணிபுரியும் மருத்துவர்கள் P.G. படிக்கச் செல்கின்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய காலிப் பணியிடங்கள், புதிதாக உருவாகக்கூடிய பணியிடங்கள் எல்லாம் மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் நிரப்பப்படுகின்றன. மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட MRB–மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் 21,023 மருத்துவர் மற்றும் செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காய்ச்சலைப் பொறுத்தவரையில், நேற்றுகூட சட்டமன்றத்தில் கேள்வி நேரத்திலும், கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்போதும் நான் பதில் சொல்லியிருக்கின்றேன். தாங்களும் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்திருக்கிறீர்கள். 12 மாவட்டங்களில் அல்ல; 12 சுகாதார H.O.D. இல், hotspot என்று நாங்கள் தேர்ந்தெடுத்து அங்கே ஒவ்வொரு கூடுதல் இயக்குநர்களையும், இணை இயக்குநர்களையும் அனுப்பியிருக்கின்றோம். பொது சுகாதாரத் துறை இயக்குநரும் தமிழ்நாடு முழுக்க சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார். அரசு, வேகமாக, துரிதமாக உள்ளாட்சித் துறை அமைச்சரோடு கலந்து பேசி, முதலமைச்சருடைய ஆணையைப் பெற்று, விரைவாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நேற்றுகூட தலைமைச் செயலாளர் அவர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களோடு இரண்டு மணிநேரம் Video Conferencing மூலமாகப் பேசி, உரிய ஆய்வுகளை மேற்கொண்டு, உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார்கள். கூடுதலாக பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நிலைமை 100 சதவிகிதம் கட்டுக்குள் இருக்கிறது; பீதி வேண்டாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தபோதுகூட TNPSC மூலமாகத்தான் மருத்துவத் துறைக்குத் தேவையான மருத்துவர்கள், செவிலியர்கள் காலிப் பணியிடங்களை நிரப்பினீர்கள். அதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு இந்த மருத்துவப் பணியாளர்

2017 ஜூலை 12]

தேர்வு வாரியத்தை Medical Recruitment Board–ஐ உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) Board–ஐ உருவாக்கியது மட்டுமல்லாமல், உருவாக்கிய இந்த 5 ஆண்டுக்காலங்களில் 21,023 பேரை நியமித்துள்ளார்கள். உலக வரலாற்றிலேயே இவ்வளவு பணிகளுக்கு நியமனம் நடந்தது கிடையாது. செவிலியர்கள் மட்டும் 9,990 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நாளைய தினம் 600 பேருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பணி ஆணை வழங்கவிருக்கிறார்கள். நேற்றைக்கு முன்தினம்கூட நம்முடைய குன்னூர் உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள் கூறிய Technician post–க்கு 150 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கினார்கள். செய்தித்தாள்களில் நல்ல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் குறிப்பிடுகின்ற அத்தனை செய்திகளையும் நான் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். அரசு வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

188—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***9550—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம்